வாழ்வதற்கான வழி வகைகளை அரசு மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் எவ்வளவு பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள் என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். ஆண்கள் மொத்தம் 1,985, பெண்கள் 987, சிறுவர்கள் 316 மொத்தம் 3,288. தொழு நோயால் பாதிக்கப்பட்ட பிச்சைக்காரர்கள் இந்த இல்லங்களில் மறு வாழ்வு பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 10.20)

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பிச்சைக்காரர்களின் நலத்திற்காக என்று தனியாக ஒரு வாரியம் அமைத்து, அதற்குத் தாமரைக்கனி போன்ற உறுப்பினர்களைத் தலைவராக நியமிப்பதற்கான யோசனை அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தலைவர் பதவி ஒன்றும் இப்பொழுது காலியாக இல்லை (சிரிப்பு).

154—

பெரியார் மாவட்டத்திலுள்ள நடமாடும் கால்நடை மருந்தகங்கள்.

*வினா எண். 18603— திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பெரியார் மாவட்டத்தில் நடமாடும் கால்நடை மருத்துவ மனைகள் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு இயங்குகின்றன?

(இ) அவைகளில் என்னென்ன வசதிகள் உள்ளன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) ஆம்.

(ஆ) ஈரோடு கோபிசெட்டிபாளையம், தாராபுரம் கோட்டங்களில் சம்பந்தப்பட்ட உதவி இயக்குநர்கள் கட்டுப்பாட்டில் மூன்று நடமாடும் கால்நண்டை மருந்தகங்கள் இயங்குகின்றன.

(இ) இந்த நடமாடும் கால்நடை மருந்தக ஊர்திகள் ஒரு வாரத்தில் 5 நாட்கள் காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை குறிப்பிட்ட கிராமங்களுக்குச் சென்று கால்நடை

1984 பிப்ரவரி 23]

மருத்துவத் தேவைகளை கவனிக்கின்றன. ஒவ்வொரு நடமாடும் கால்நடை மருந்தக ஊர்தியிலும் ரூ. 10,000- பெறுமானமுள்ள கால்நடைகளுக்கு தேவையான மருந்துகளும், ரூ. 20,000- பெறுமானமுள்ள வைத்தியத்திற்கு தேவையான கூடுதல் வசதிகளும், உபகரணங்களும் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கால்நடை மருந்தகத்திற்கும் ஒரு கால்நடை உதவி மருத்துவர், ஒரு இரண்டாம் நிலை கால்நடை ஆய்வாளர், ஒரு ஊர்தி ஓட்டுநர், இரு கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் வழங்கப்பட்டுள்ளது. குடற்புழு நீக்க பணிகளும், தொற்று நோய் தடுப்பூசி போடும் பணிகளும், மலட்டுத் தன்மை நீக்கத்திற்கான பணிகளும், செயற்கைக் கருவூட்டல் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நடமாடும் கால்நடை மருத்துவமனைகளுக்குக் கொடுக்கப்படும் மருந்துகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. போதாததாக உள்ளது என்ற புகார் அரசுக்கு வந்துள்ளதா? ஆமெனில், அந்த நடமாடும் மருத்துவ மனைகளுக்கு அதிக அளவிற்கு மருந்துகளை ஒதுக்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நடமாடும் கால்நடை மருத்துவ மனைகளுக்குப் போதுமான மருந்துகள் சரியாக அளிக்கப் படவில்லை என்பது பற்றிய தகவல் அரசுக்கு வரவில்லை. ரூபாய் 10,000 பெறுமானமுள்ள கால்நடைகளுக்குத் தேவையான மருந்துகளும், ரூ. 20,000 பெறுமானமுள்ள வைத்தியத்திற்குத் தேவையான கூடுதல் வசதிகளும், உபகரணங்களும் வைக்கப் பட்டுள்ளன. இதுவே போதுமானது என்று கருதுகிறேன். அப்படிப் போதுமானதாகத் தெரியவில்லை என்றால் அதைப் பற்றி அதிகாரிகளிடத்தில் நான் சொல்லி அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கால்நடைகளுக்கு வரும் தொற்று நோய்களைத் தடுக்கும் மருந்துகளை இலவசமாக விவசாயிகளுக்கு வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சில மருந்துகள், அதாவது, குடற்புழு நீக்கப் பணிகளும், தொற்று நோய்த் தடுப்பூசி போடும் பணிகளும், மலட்டுத் தன்மை நீக்கத்திற்கான பணிகளும், செயற்கைக் கருவூட்டல் பணிகளும் மேற்கொள்ளப் படுவதற்கான சில மருந்துகளை இலவசமாகக் கூடக் கொடுக்கலாம். அந்த மருந்துகள் தமிழ்நாட்டில் தயார் செய்யக்கூடிய மருந்துகளாக இருப்பதால் கொடுக்கலாம். சில மருந்துகளை இங்கே தயார் செய்ய முடியாமல் இருப்பதால், நிதி நிலைமை

கேற்றவாறு அந்த மருந்துகளை மானிய விலையில்கூடக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சினை

அவையை ஒத்திவைக்குமுன் அவையின் கருத்து அறிதல்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அவை நடவடிக்கைகள் குறித்துச் சொல்வதற்கு—

It is high time இது அவசியம் என்று நான் நினைக்கிறேன். இது குறித்து துணைத் தலைவரவர்களோடு நீங்கள் கொஞ்சம் டிஸ்கஸ் செய்ய வேண்டியது அவசியம்.

நேற்று மாலை வறட்சி, வெள்ளம் சம்பந்தமான விவாதம் நடந்து கொண்டிருந்தபொழுது மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் கூறிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் பதிலைக் கூறி முடிக்கவில்லை. அவர் பதில் கூறிக்கொண்டிருந்தபோது, திரு. கருப்பையா அவர்கள் இன்டர்வீன் செய்ய எழுந்தபொழுது அமைச்சரவர்கள் உட்கார்ந்து விட்டார்கள். ஆனால் என்ன ஆச்சரியம் என்றால் டக்கென்று டெப்டி ஸ்பீக்கர் அவர்கள், அவை முடிந்து விட்டது என்று சொல்லி ஒரேடியாகப் போய் விட்டார்கள். I am telling this, in the interest of the House. வெளியிலே இருப்பவர்கள், இங்கே எப்படி ஹவுஸை நடத்து கிறார்கள் என்பதுபற்றித் தப்பான எண்ணத்திற்கு வரக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். அமைச்சரவர்கள் பேச்சை முடிக்கவில்லை. இவர் இன்டர்வீன் செய்தார். உடனே அமைச் சரவர்கள் உட்கார்ந்துவிட்டார்கள். அதற்குள் துணைத் தலைவ ரவர்கள் எழுந்து அவையை ஒத்திவைத்துவிட்டு கிடுகிடு என்று எழுந்து போய்விட்டார். நாங்கள் அப்படியே Stun ஆகி நின்று விட்டோம். உங்களுக்கும் தெரியும் நாடாளுமன்ற நடைமுறை கள் பற்றி.

The Speaker or the Deputy Speaker are not above the House. They are part of that House. Their power is to regulate all the proceedings of the House, that too under the rules. There is no subordinate-super subordinate relationship or master–servant relationship.